உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீதோபாசுவாமிகள் சரித்திரம்

ஷை சுவாமிகள் மடாலயத்து

**ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள்**

கேட்டுக்கொண்டபடி

திருவோத்தூர் திருநாவுக்கரசு மடம்

சைவஸ்ரீ முத்தமிழ் ரத்நாகரம்

**ம. தி. பானுகவியவர்களால்**

இயற்றப்பட்டு

வேலூர் சைதாப்பேட்டை இரத்தின வியாபாரம்

ம-ா-ா-ஸ்ரீ,

**A. S. G. L. பத்மநாபாச்சாரியார்**

அவர்களால்

வேலூர்

**சுங்கா விநாயகர் அச்சுக்கூடத்திற்**

...ிக்கப்பட்டது.

...மாதீசஷு

...குனிமீ

...1914.

Q2:4198ய
N14
180025

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ தோபாசுவாமிகள் சரித்திரம்.

ஷை சுவாமிகள் மடாலயத்து

**ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள்**

கேட்டுக்கொண்டபடி

திருவோத்தூர் திருநாவுக்கரசு மடம்

சைவஸ்ரீ முத்தமிழ்ரத்நாகரம்

**ம. தி. பானுகவியவர்களால்**

இயற்றப்பட்டு

வேலூர் சைதாப்பேட்டை இரத்தின வியாபாரம்

ம-ள-ள-ஸ்ரீ,

**A. S. G. L. பத்மநாபாச்சாரியார்**

அவர்களால்

வேலூர்

**சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்**

பதிப்பிக்கப்பட்டது

பிரமாதீச வரு

பங்குனி மீ

1914

Q 224498

# முகவுரை.

அவாப்தகாமனை பரமேசுவரனுடைய திருவருளைப் பெற்ற மேலோராக விளங்கின ரென்றறியப்படுதலின் ஸ்ரீ தோபாசாமி யென்னுஞ் சிவயோகியாரது சரிதத்தினைப் பலர்க்கும் பயன்படக் கருதிக் கடின சந்திகளின்றிய வெளியநடையில் விருத்தப்பாக்களா லியற்றி யதற்கு ஸ்ரீ தோபாசுவாமிகள் சரிதை யென்று பெயருமமைத்துச் சரிதச்சுருக்கமுமெழுதி வெளியிட்டுள்ளேன் என்னோக்க மின்னதென்றுணர்ந்தவர்கள் எனதிந்த முயற்சியைப் பயனற்றதெனக்கருதாரென்பதுதிண்ணம். யானறிந்தமட்டி லெழுதி யுள்ள சரிதங்கள் தவிர வேறுமுளவேல் மறுமுறை யவைகளையும்பாட்டிலாக்கி வெளியிடச் சித்தமாயிருக்கின்றேன்.

இங்ஙனம்:

திருவோத்தூர்-ம-தி. பானுகவி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீதோபாசுவாமிகள் திவ்ய சரித்திரச்சுருக்கம்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்."

எந்நாட்டினு மிக்க தென்னாட்டின்கண் சிவாலயங்கள் மிகுதியும் அமையப்பெற்றுள்ளதாயும் அச்சிவாலயங்களைத் தரிசிக்கவரும் சிவனடியார் யாவருக்கும் அன்புடனமுதூட்டும் பெருமையிற் சிறந்தார் வாழ்தலினாற் "சோழவளநாடு சோறுடைத்து" என்று ஔவைப் பிராட்டியாராற் புகழப்பட்டதாயுமுள்ள சோழவளநாட்டின்கண் திரிசிரபுரம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் வேளாளர் குலத்தில் இற்றைக்குச்சுமார் நூறுவருடங்களுக்குமுன் "கிழக்கு இந்தியா வர்த்தக சங்கத்தார்" (The East India Company), தென்னிந்தியாவை ஆண்ட காலத்து இந்நாட்டுப் பட்டாளத்தைச்சார்ந்த ஒருவருக்கு ஓராருமைப் புத்திரர் தோன்றினர். இவர் இராமலிங்கம் எனப்பிள்ளைத்திருநாமம் சூட்டப்பெற்று வளர்ந்து வருவாராயினர் இங்ஙனம் வளர்ந்து வருங்கால், இவர் மிகச் சிறு

வயதினராயிருக்குங்காலத்திலேயே, இவரது தாய்தந்தையர்கள் இம்மண்ணுலகைத் துறந்தனர். துறந்த பின்னர் இராமலிங்கம் என்னும் பெயருடைய இப்பிள்ளையை அரசாங்கத்தார் வளர்த்து ஆதரித்துத் தகுந்தவயது வந்தவுடன் இவரது தந்தைக்குரிய பட்டாளத்து உத்தியோகத்தையுங் கொடுத்துச் சென்னையிலிருக்கும்படி செய்தனர்.

அங்ஙனமிருக்குநாளில் இவர், முன்னர்த் தந்தை தாயர்களால் பயிற்றுவிக்கப்பெற்ற கல்வியுடன் தமது முயற்சியாற் பலகலைகளையும் உணர்வாராயினர். முற்சென்மத்திற் செய்த தவத்தின் பயனாகிய பக்குவ விசேடத்தால் தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்களை நாள்தோறும் அன்புடன் பாராயணஞ் செய்துவருவாராயினர். அவ்வாறு பாராயணஞ் செய்தலினால் உமாதேவியாரால் ஞானப்பாலூட்டப் பெற்றுச் சராசரங்களனைத்துக்கும் சிவம்பெருக்கிய திருஞானசம்பந்தப் பிள்ளையார்மீது அதிக அன்புண்டாக அவ்வன்பின் பெருக்கால், அத்திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளையே, குருவாகப் பாவித்துத் தியானித்து வந்தனர். அத்தியானபலத்தால் காலாந்தரத்தில் நிட்டைகூடப்பெற்று அந்நிட்டையில் வெம்பந்த நீக்குஞ் சம்பந்தப்பெருமான் தோன்றி அருளுபதேசம் செய்யப் பெற்றனர். நமதுசுவாமிகள் அவ்வுபதேச முறையினின்று பயிலப் பயிலச் சுவானுபூதி நிலைகூடப்பெற்றனர். இவ்வாறு சிவானுபவமே சுவானுபூதியாய் வாழுநாளில் ஒருநாள் நீண்டநேரம் நிட்டையிலிருக்க அப்பொழுது "கபாத்து"ச் (ஆயுதப் பயிற்சி), செய்யவேண்டியகாலமாதலால் இவர்க்குப் பதிலாக இறைவனே இவர்போலத் தோன்றிக் கபாத்துச் செய்து இறுதியில் குதிரைமட்டும் நிற்க இறைவன் மறைந்தனன். இவ்வற்புதச் செயலைக்கண்ட துரைமகன்

ஆச்சரியமடைந்து இப்பெரியாரிருக்குமிடத்திற் சென்று பார்க்கும்பொழுது இவர் உடலும் உலகுந்தோன்றாத பரமானந்த நிட்டையில் அமிழ்ந்தி இருந்தனர். அதனைப் பார்த்த துரைமகன் இவர் விழிப்பதை எதிர்பார்த்திருந்தனன் இவரும் சிறிதுநேரம் சென்று விழித்தார். விழித்தவுடன் நடந்த அற்புதச் செயலைத் துரைமகனும் பிறருஞ் சொல்லக்கேட்டு அடியார்க் கெளியனாகிய பரமபதியின் திருவருட் பெருக்கை நினைந்து நினைந்து பரவசமாகி அப்பொழுதே தமது வேலையை ராஜிநாமாக் கொடுத்துவிட்டுத் துறவு பூண்டனர். இவ்வாறு துறவியாய் வாழுநாளில் பிச்சை வாங்குதற்காக ஓர் சட்டிமாத்திரம் வைத்திருப்பார். இவருடன் எப்பொழுதும் நான்கு நாய்கள் தொடர்ந்து திரியும். ஒருதினம் வழியில் இவர் கிடப்பதைத்கண்ட அதிகாரியொருவர் சாட்டையாலடிக்க அவ்வடி இவர்மீது படாமல் அடித்த அவர் கையைத் தம்பிக்கச்செய்தது. அந்நாளில் அவ்வதிகாரியை யுள்ளிட்டார் பலரும் வந்து வேண்ட அவ்வேண்டுகோளுக்கிணங்கி முன்போலவிருக்கும்படி செய்தனர். இவருக்கு எக்காரணத்தாலோ "தோபா சுவாமிகள்" என்றபெயர் வழங்கப்பெற்று வந்தது. ஆயினும், "தோ" என்னும் அட்சரத்தை முதலாகக் கொண்டு பா அருளிச்செய்த ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானே இம்மகானுக்குக் குருவாதலால் அக்குருவை நினையுந்தோறும் இவர் "தோபா" என்று சொல்லுவரென்று இம்மகானுபாவரிடத்து அன்புள்ள சிவயோகிகள் கூறுகின்றார்கள். ஆதலால் "தோபாசுவாமிகள் என்று வழங்கி வந்ததுபோலும்; சிலர் இவரைச் சோதனை செய்யவெண்ணி மயக்கத்தைத் தரும் கள் முதலியவற்றையருந்தும்படி கொடுத்தனர். இவர் அவற்றைப்பாலாகவும் தயிராகவும் மாற்றித் தம்முடன் திரிகின்ற நாய்களை யருந்தும்படி

செய்தனர். பின்னர் மகம்மதியனொருவன் சுண்டுவில்லால் ஓர் ஊசியை இவர்மீது எறிவித்தான். நமது சுவாமிகள் அவ்வூசியினை எறிந்த அவனது மர்மஸ்தானத்தில் படச் செய்து பின்னர் அவன் வேண்டுகோட்கிணங்கி அதனை வெளிவரச் செய்தனர். இவ்வற்புதச் செயலுக்காக அம் மகம்மதியன் மசூதி ஒன்று கட்டுவித்தான். அது இன்றைக்கும் சென்னையில் "தோபா" மசூதி யென்று வழங்கி வருகின்றது. பின்னொருதினம் இப்பெரியார் ஓர் குயவன் வீட்டுத் திண்ணையிலிருந்தகாலத்து இரவில் இவர் ஒளியுருவாகப் பிரகாசித்ததை அக்குயவன் மனைவிகண்டு அச்சமுற்றனள். அவள் இவ்வற்புதத்தைக்கண்டு அஞ்சினளென்று அறிந்த இப்பெரியார் உடனே அவ்விடம் விட்டு வேறிடஞ்சென்றனர். இவ்வருட்செயலை அவள் தன் நாயகனுக்குச் சொல்ல இருவரும் திண்ணையைப்பார்க்கச் சுவாமியைக் காணாதவராகி வருந்தி அவரெழுந்தருளி இருக்குமிடத்திற்கு வந்து நமஸ்கரித்து தமக்குக் குழந்தையில்லாக் குறையினை விண்ணப்பித்துக்கொண்டனர். அக்குயவனும் அவன் மனைவியும் கிழப்பருவத்தையும் மலட்டுத்தன்மையையும் பெற்றிருப்பினும் இப்பெரியார் திருவருட்பெருக்கால், கொடுக்கப்பெற்ற சிறுசோற்றை அருந்தினமாத்திரத்தே மலட்டுத்தன்மை நீங்கிக் கர்ப்பவதியாகிப் பிள்ளையைப் பெற்றாள். இன்னொரு குயவன் பலமக்களைப் பெற்று ஆதரிக்க முடியாது வறியவனாயிருந்து வருந்துங்காலத்து இப்பெரியார் அவன் வீட்டிற்சென்று அக்குயவனை அடிக்க அவன் வெளியே போய்விட்டான். அன்றுமுதல் இப்பெரியார் அவன் வீட்டு வாயிலில் இருந்துகொண்டு தமக்கு வரும் பிச்சையை அவன் பிள்ளைகளுக்குங்கொடுத்து ஆதரித்து வந்தனர். இதனையுணர்ந்த சிலர் இவரது பிச்சைச் சோற்றினாற் பிள்ளைகள் பிழைத்து வருகின்றனவேயென்

றிரங்கி அப்பிள்ளைகளை யாதரிப்பதற்காக அக்குயத்திக்குப் பொருளுதவி செய்தனர். உடனே இப்பெரியார் அவ்விடம்விட்டு வேறிடம் சென்றனர். இவர் நிர்வாணமாக இருக்குங்கோலத்தைக்கண்டவதிகாரியொருவன் இவரைச் சிறைச்சாலையில் வைத்தனன். வைத்த அன்றிரவிலேயே அவ்வதிகாரியின் மாளிகையின் மேலுள்ள படுக்கையில் இப்பெரியாரிருக்கக் கண்டு அவ்வதிகாரி மிகநடுங்கிச் சிறைக்களஞ்சென்று பார்க்க இவரிருந்த சிறைக்களம் பூட்டி இருப்பதைக்கண்டு தன்வீட்டுக்குவந்து இப்பெரியாரை நமஸ்கரித்து வண்டியிலேற்றி வேலூரில் கொண்டு வந்துசேர்த்து அங்கிருக்கும்படி செய்துவிட்டுத் தன்னிருப்பிடம் சென்றான். 'தொண்டைநாடு சான்றோருடைத்து'' என்பது அம்மையார் திருவாக்காதலின் அவ்வாக்குக்கிலக்கியமாகச் சுவாமிகள் வேலூருக்கெழுந்தருளியது வியக்கத்தக்கது, அதுமுதல் இவர் பன்னிரண்டு வருடங்கள் வேலூரிலேயே இருந்தனர். இருந்தகாலத்துப் பிள்ளையில்லாதவர்களுக்குப் பிள்ளையுண்டாக வரங்கொடுத்தும் முடமுள்ளாருக்கு அம்முடத்தை நீங்கச்செய்தும் தம்மைச்சோதனை செய்யும்படியாக விடங்கலந்த வுணவைத் தந்தவரை இறக்கும்படி செய்தும், தம்மையடித்தவருடைய அடி தம்மீது படாமல் அடித்த அவர்மீது படச்செய்தும் குப்பமென்னுங் கிராமத்திற் பதினொருவயதுள்ள வோர் பெண் குழந்தை புளியம்விதை வைத்திருந்த பாண்டத்திற் கை வைக்க அதிலோர் புயங்கமிருந்து கடிக்க விறந்தது. இவ்வருமைப் பெரியாரின் பெருமையைக் கேள்வியுற்ற அக் குழந்தையின் மாதாபிதாக்கள் இம்மாஹானின்றிருமுன்பாக அக்குழந்தையைக்கிடத்தி யுயிர்பெற வேண்டிக் கொள்ள கருணையாலவ்வாறே செய்தும் உத்தியோகமிழந்து வருந்தினவருக்கு உத்தியோகம் வரும்படி வரங்

கொடுத்தும், அவ்வாறு உத்தியோகத்தைப்பெற்ற ஒருவர் இப்பெரியாரிருந்தவோர் மகம்மதியன் வீட்டை ஆயிரம் ரூபா கிரயங்கொடுத்து வாங்கி இவர்க்கு இருப்பிடமாகக் கொடுக்கப் பெற்றும், கடைகளில் இவர் திருக்கரத்தாற் றொடப்பெற்ற பொருள்கள் அதிக லாபத்துடன் விலையா கியும் இவருக்குச் சமையல் செய்துகொண்டிருந்த வொரு வன் இவருக்குத்தெரியாமல் புலாலைச் சமைத்துவைக்க அப்புலாலை உயிர்த்தெழச்செய்தும், இரவிற் படுத்திருக்குங் கால் ஒவ்வோரங்கங்களும் வெவ்வேறாகக் கிடப்பக்காட்டி யும், ஓரதிகாரி சித்தநாதனென்னும் பரதேசியையடித்த காரணத்தால் சுரநோயுற்று வருந்த இப்பெரியார் பேரைச் சொல்லிக் கொடுத்த விபூதியினால் அச்சுரம் நீங்கும்படி செய்தும் பிறவிடங்களில் நடந்தவற்றையெல்லாம் இவர் இருக்குமிடத்திலிருந்தே சொல்லியும், இவ்வற்புதச் செயல் களைக்கேட்ட காஞ்சியதிகாரி யொருவரால் இவரிருக்கும் பொழுதே இவருக்குச் சமாதிக்கட்டிடம் கட்டிமுடிக்கச் செய்தும் பற்பல அருஞ்செயல்களைச் செய்து வந்தனர். இம்மகானுபாவர் இற்றைக்கு அறுபத்துமூன்று வருடங் களுக்கு முன்னாகிய (கி. பி. 1850வருஷத்திற்குச்சரியான) சாலிவாகன சகாப்தம் 1772ன் மேற் சொல்லாநின்ற சாதாரணவருஷ பங்குனிமீ 21உ புதவாரம் பூர்வபட்சத்துப் பிரதமையும் இரேவதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் அகண்டாகார சச்சிதானந்தப் பரசிவமாகிய சோதியிற் கலந்தனர். எனப்பின் வருஞ்செய்யு ளொன்றாற்றெரிய வருகின்றது.

மேலே 3-வது பக்கம் 11-வது வரியிற்காட்டிய இம் மகானது சட்டியானது இப்போதும் திருப்பாதிரிப் புலியூர் புரிக்கீசன்பேட்டை ப. க. பழனியாண்டி முதலி

யார் வீட்டில் அநேக மகிமைகளை விளைவித்தும் பூசிக்கப் பட்டும் வருகின்றது.

இச்சரிதச்சுருக்கம் சில தகுந்த மூதறிவாளர் வழி யுணர்ந்த வண்ணமெழுதியதாம்.

---

## த னி.

பன்னிரு சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சாந்தம் பழுத்த வருட்டருவே
சைதை மருவுந் தனிக்குருவே
தானற்றது வாம் யோகியர்க்கு
சார்தற்கரிதாந் தத்துவமே.
நீந்த வறியாப் பவக்கடற் கோர்
நிமலப் புணையே நித்தியமே
நிலைகொள் பரமானந்த நெறி
நிற்குந்த வத்தி னெடும்பயனே.
ஏந்து சாலியாயிரத்தோ
டெழுநூற்றெழு பத்திரண்டினிலே
யியலுஞ் சாதாரணவாண்டி
னிடைப்பங்குனி மூவேழின்கண்.
ஆர்ந்த புதனிற் பூர்வபக்ஷத்
தமரு முதலினி ரேவதியி
லகண்ட பரிபூரணத் தொன்றி
யருளுந் தோப்பாவாரமுதே.

குருவே துணை.

**ஸ்ரீ தோப்பாசுவாமிகள் திவ்ய சரிதச்சுருக்கம்**

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

# ஸ்ரீ தோபா சுவாமிகள் சரித்திரம்.

## பாயிரம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

### விநாயகர்.

திருவளர்மார்பின் வனமலரலங்கல்
சேர்த்தியவரி முதலமரர்
பெருவளங்களை யூண்பொருளெனப் பேணாப்
பெருமிதவுளத்திடைப் பிறங்கும்
ஒருவனையுகத்துக் கொருதிருப் பெயரா
ரும்பலையம்பிகையளித்த
கருமுகினிறத்த கசானனப்பரனைக் கைதொழூஉ
வணங்கி வாழ்த்திடுவாம். (1)

### பரமசிவம்.

முத்திறப்புவனமாக்கள் முதிர்வினைக் கேற்பவன்னார்
பத்தியின் பயனை யீயும் பரமனைப் பிரம னாதி
வித்தகர்க் கருளுங் கைலை விமலனை யுலக மீன்ற
சத்திமத்தகத்தின்மேவுந் தலைவனைநினைந்து வாழ்வாம். (2)

### பராசத்தி.

மலரிடை மணம்போலெந்தை மாட்டமர் கருணைவெள்ளம்
பலரிடைப்பரவச்செய்யும் பவளவா யமுதையின்சொற்
கலரிடையளியினெய்து மன்னையைப் பின்னையாதி
சிலரிடையன்றியாண்டுஞ்செறிபராபரையைத்தாழ்வாம் (3)

### நடேசர்.

அலைசெறியளக்கர் சூழ்ந்தவவனியே முதலாக
நிலைபெறு புவனம்யாவு நிறுத்தியவாணை யோர்பாற்
கலைமகள் முதலோர் போற்றக்கண்டுளமகிழநின்ற
நிலைபெயராமலாடு நிமலனை நினைந்துவாழ்வாம் (4)

### சிவகாமி.

தேன்பிலிற்றுங்கடுக்கையந்தார்ச்சடை மௌலிச்சிவபரனை
ச்சிந்திப்பார்க்குக்
கான்பிலிற்று பொன்னலரார் கற்பகமும் புட்பகமுங்
கருதார்சென்னி
யூன்பிலிற்றுஞ் சக்கரமு முதலபல வுதவியவர்க்
குவப்புநல்கு
வான்பிலிற்று புகழாளைச் சிவகாம சுந்தரியை
வணங்கி வாழ்வாம். (5)

### கணபதி.

இருதிணையுயிரும் பணியிறை தானே
யென்பதையுணர்த்த வீருருவும்
ஒருதிருவடிவிற்கூட்டி நின்றுலகை
யுஞற்றிய வொருவனைப் பொருவில்
திருமறை முதலாயிலங்கிய தேவைச்
சிந்தியார்க் கூறிழை செய்கை
யொருவனை நினையாவலர் கரத்தேந்தி
யுஞற்று பூசனையுடன் பணிவாம். (6)

### கந்தர்.

வெள்ளியை யார்ந்திடு வேத்தியல்சூரை
யுள்ளியை யாம லொழித்துயர் சிகியிற்

கொள்ளியை வெய்ய கிராதர் குலத்து
வள்ளியை யார்ந்த வளத்தனை யார்வாம். (7)

## நந்திகேசுரர்.

சிந்தையிலிறையை யுள்ளிச் சென்னியிற் கரங்கள்கூப்பி
வந்தியை யமராராதி வானவர் தொகையின்மோலி
தந்திருவடியின் முன்னந்தாழுறு பெரும்பேறுற்ற
நந்தியெம்பெருமான்றுளை நயந்துநம் பிறவிதீர்ப்பாம். (8)

## திருஞானசம்பந்தர்.

அமிழ்தினு மினியதமிழ் மொழிசெய்த
வருந்தவப்பேற்றினுலிந்த
விமிழ்திரை யுலகவளாகத்தி லெய்தி
யெண்ணிலற்புதங்களை யியற்றித்
தமிழ்மறை யெமக்குத்தந்த மெஞ்ஞானத்
தலைவனை யுமையவ ளளித்த
குமிழ்முலை யமுதங்கொண்ட செங்கனிவாய்க்
கொண்டலைவணங்கி வாழ்த்திடுவோம். (9)

## திருநாவுக்கரசர்.

எத்தகையு மிருமிறை திருப்பெயரா
யிலங்குமைந்தெழுத்தினுலன்றிச்
சித்தியும் பிறவுஞ் சேர்கலாவென்னல்
தெரித்திடப் பிறமதக்கொடிய
மத்தர்கள் பிணித்தகற்றுணை புணையா
மறிகடல் கடந்த வாகீச
வித்தகன் செய்யவடி மலரிணையை
விரும்பியின்றிறைஞ்சி வாழ்த்திடுவோம். (10)

### சுந்தரமூர்த்திகள்.

எண்ணுவா ரெண்ணமியாவையு மளிப்பா
னிளமதிக் கண்ணியஞ்சடில
வண்ணலே யென்று வலகட லுடுத்த
வவனியோ ரறிசரவலனை
வண்ணவார் கூந்தன் மடந்தையரிடத்து
மருவிட விடுத்தவன் றனையே
நண்ணியார் நாவனம்பியை யெமையாள்
நாதனைவழுத்தி வாழ்த்திடுவாம். (11)

### மணிவாசகப்பெருமான்.

ஒருவாசகத்தும் பிறவு மெனவுரைப்பார் குழுவு
முவை பொய்யே
மருவாசகத்தும் பிறவுமிறை மாட்டேயென்று
மதிப்பாரும்
பொருவாசகத்துக் குறுகாட்டாய் போந்தவீசன்
றிருவுருவாந்
திருவாசகத்துக் கதிபதியாந்தேவை நினைந்து
பணிகுதுமால். (12)

### அடியர்.

கடிகொள்கொன்றை யான் கமலமேநிக
ரடிகள் வாழ்த்திடு மறிவறிந்தநம்
மடிகள் பாதமென் னகனிலன்றியும்
முடிகொள் மோலியாய் முடிகிநிற்கவே. (13)

### தோபா.

வண்டமிழ் மறைக டந்த வள்ளலெங்காழி வேந்தைக்
கண்டருள்பெற்று வையங் கைதொழக் கருத்திலையன்

எண்டகைச் சித்துமே வலியற்றநல் வேலையுற்ற
வண்டர்கள் புகழுந்தோபா வடியிணை முடிமேல்வைப்பாம்.

## விபூதி.

ஆதினால் வேதத்தானு மளப்பரு மமலன் செய்ய
சோதியாருருவிற்பூத்த தூய்மையார் பொருளாய்வேதம்
நீதியாற் புகழ்ந்து கூறுநீள் புகழுற்ற வெண்மைப்
பூதியார்பொலிவையெண்ணிப்போக்குதும்பிறவியெல்லாம்

## கண்மணி.

விண்மணியங்கியிந்து விளங்கருள் விழியாய்க்கொண்டான்
கண்மணியாகிப்பூண்டார் கவலைகளனைத்தும் போக்கும்
எண்மணியன்றி மற்றையெண்மணி யென்னே யென்று
உண்மணிமந்திரத்தா ரூறுமணி யுயர்வினிற்பாம். (16)

## ஆசிரியன்.

பந்தமும் வீடும் மற்றைப் பற்பலதிறமுமோரா
வெந்தனுக்குணர்த்தி வேண்டுமியனில பலவுமீந்த
தந்தையைச் சிவஞானப் பேர்சார்தரு குரவன்றன்னை
நிந்தையில் திருவோத்தூரார் நிமலனை நினைந்து வாழ்வாம்.

## இச்சரிதையை இயற்றுதற்குக் காரணம்.

ஒண்டமிழ்நாட்டின் முன்னாளுற்றவர் தம்மிற்பல்லோர்
கொண்ட சீரிறந்து பட்டகுறியுணர்புலவர் பின்னாள்
வண்டமிழ்பாவில் வைத்தார்வான் புகழுடையார்காதை
கண்டவர்கேட்டோர் கூறக்கருதியன்னதனையானும். (18)

நலமலிகாழி வேந்திலை லருள்பெற்ற தோபா
நிலமலி புகழைப் பல்லோர்நிகழ்த்திட வறிந்தமட்டில்

இலையிதென் றகலாவண்ண மின்றமிழ் விருத்தப்பாவால்
நிலமுறப்பு கன்றேனோ நின்றவருவகையார. (19)

கற்றறிதிறமிலாத கவியெனக்களையார் நல்லோர்
குற்றமும் புகலாரென்னைக் குறிக்குளா ரெனினுமுன்னுள்
உற்றதையுணரத்தக்க வொருபெருங் கருவியென்னச்
சொற்றிட நிற்குமென்னுந் துணிபினை யெவருங்கொள்வார்.

பண்டுளாரான மேலோர் பரப்பிய புகழ்களெல்லாம்
கண்டுளார் கவியிலாக்கிக் காப்பியமுறையில் வைத்தாற்
கொண்டுளார் மகிழ்ச்சிநிற்கக் கூறலா மறந்தேமாயின்
விண்டுளார்சரித மெங்ஙன் விளங்குற வுரைப்பதம்மா. (21)

பற்றிலாப் பரமன்பாதம் பற்றிய பெரியோரான
நற்றவர் தோபாவென்னு நல்லவர்வதூதப்பேர்
பெற்றவர் சரிதமென்றாற் பேசலாந் தகைத்தன்றேனும்
உற்றவெனாசையாலீ துரைப் பதற்குற்றேன் மாதோ. (22)

## பாயிர முற்றிற்று.

## தோற்ற முரைத்த சரிதை.

அவனியிற்கொடி யோரான வரட்டரை யடக்கியிந்நாட்
புவனியை யொரு கோலோச்சிப் புகழுறவாளுமேன்மைத்
தவனிலை யுடைய மன்னன் தங்குடிவணிகர்கூடிப்
புவனியை யாண்டதாகப் புகலுறுநாள் கடம்பில் (1)

கும்பினிக் காலமென்னக் குவலயத்தவர்கள்கூறு
மிம்பரிலன்னார் தங்களிணை யறுபொருநராக
வைம்பதினாயிரத்துக் கதிகமாயிந் நாட்டாரைத்
தம்படைத் துணையாக்கொண்ட சரிதமாரறியார் மன்னோ

அவருளோர்வீரன்மைந்த னருந்தவமுன்னர்ச்செய்தோன்
றவறிலாமனைவியோடுஞ் சைவநற் சார்பாய் நின்றே
னுவரிசூழுலகிற் பாடையுயர் தமிழாகவுள்ளோ
னெவரினுமேம்பட்டா னுயிருந்தன னிருக்குநாளில். (3)

இறைவிழிமணியுநீறு மிலங்குடலவன்றன்பாரி
நிறைதரு சூலுற்றண்ணல் நீள்பெருங் கருணையாலே
குறைவிலை நமக்கென்றெண்ணங் குலவிடப்பற்பன்மைந்தர்
பிறைநுதல்பயந்தாள்பின்னைப்பெய்வளையொருத்திபோந்
தாள். (4)

இல்லறமுடையார்க்கம்ம வெழின்மக வில்லையாகிற்
சொல்லற நிலையுமில்லை துயரறு வழியு மில்லை
யெல்லையின் மகப்பெற்றருக் கென்குறை நிற்கப்பின்றை
வல்லியென்னிடையாள்மீண்டும்வாய்த்தனள்கருப்பமாதோ

வல்லியு மதனனுனும் வாள்விழியிமையே யென்னுப்
புல்லியும்பிரிந்து முற்றபுகழ்நல வுவகைக் கேற்ப
நல்லியலோரை தன்னினங் கையுமிறை யையுள்ளி
யெல்லியை யுவரியீன்ற தெனமகட் பயந்தாளன்றே. (6)

மகன்வரு தோற்றங்கண்ட மதரரிக் கருங்கட்செவ்வாய்
இகலறுமுளத் தாள்சாலவிறும் பூது படைத் தாளன்னுன்
றகவுறுமழகுமாமைத் தன்மையு நோக்கித் தந்தை
இகழறு சடங்குமுற்று மியற்றின னிருந்தபின்றை. (7)

கயரத துரகனுகிக் காசினி முழுதுமாண்ட
தயாதகுமரனுட்டு தானுபேர் புகுத்திப்பிள்ளைக்
கயமுனி யனையதோற்றக் காளையை வளர்ப்பவன்னேன்
மயலறக் கலைகளாதி மாணவருடன் கற்றனல். (8)

இளமதி வளர்ச்சியென்ன விலங்கிய தோற்றத் தின்னேன்
உளமகிழ்தரப் பாடங்களொப்பித்தல் கண்ட வாசா
ளிளகிய மனத்தனுகியிலக் கணமுதல சொற்ருன்
களவற விவனுங்கற்ருன் கடந்தது வாலரூபம். (9)

கட்டழகுடையான் பின்றைக் காவலருவப்பமள்ளர்
கொட்டொடுபயிற்றுபோரின்குறியெலாமுணர்ந்துபாய்மா
விட்டிடுவீரனுகி விளங்கின னிவனைப் பெற்ருேர்
விட்டிறைய டியிலுற்ருர் வீரனை யரசர்கொண்டார். (10)

கும்பினிக்குழைத்தார்மைந்தர்குழுவிடையிவனைவைத்தார்
நம்பியைப் பிணித்தபாச நழுவிடத் தக்ககாலம்
இம்பரிலடையவின்னே னெய்து முற்றவத்தின் பேற்ருல்
வெம்பவக் கொடுமையெல்லாம் விளங்கிய திவனுளத்தில்.

ஆவவோ விந்தப்பொல்லா வளற்றிடைப் பட்டாரெல்லாம்
வீவினி லொழிந்துபோவார் வியன்றனு மீட்டுமார்வார்
நோவலாலிதனில் வேறு நணுகிய பொருளின்றின்ன
போவதார் வழியிலென்னுப் புந்தியுணிளையுங்காலே. (12)

மண்ணிடைப் பிறந்தார் தம்மைமணவழியிறைவன்ருளை
நண்ணிடவொருங்குசெய்த நாயகன்காழிவேந்தை
யெண்ணிடைக்கொண்டன்னை யிறைஞ்சினுன்மனத்தால்
[வாக்காற்
பண்ணிடைக்கொண்டவேதம்பாடினுன்பன்னுளோர்நாள்.

இன்னமென்பாசம் போக்க வெய்திலன் குரவனென்னு
வன்னவனுருவை யுள்ளிலாக்குறவவன்றன் செய்ய
பொன்னடிமுழந்தாளாதி பொருந்திய தலையின்காறு
முன்னினனுன்னிறைற் கங்குற்ற தோருருவமம்மா. (14)

கண்டவருளத்தை யீர்க்குங்கவினிளங்குஞ்சிமீதி
லொண்டரளத்திற் செய்தவொளி மணிச்சுட்டிதாழ்ந்து
புண்டரநுதலிற் றெங்கப்பொலிகர மலரின்மீதே
கொண்டபாற் கிண்ணத்தோடுங் குலவுமோர் குமரற்கண்
டான். (15)

நினைவிடைத் தோன்றி மீண்டு நிலத்துற நின்றான் றன்னை
இனைவறக் கண்ட போதே யெழுந்தடி பணிந்து வாழ்த்தி
அனைதிரு மூலப்பா லுண்ட வையனே யடியேன் பாச
வினையிரி வகையெவ் வாறோ விளங்கிலே னருள வேண்டும்.

உள்ளுவா ருள்ளத் துள்ளா யொளிர்பர சிவமே நாயேன்
எள்ளுவார் தம்மிற் பட்டே னென்னினு மேழை யேனைத்
தள்ளுவா யல்லை வேறோர் சரணிலை யடியேற் கென்னுக்
கள்ளுவார் மலர்த்தாரானைக்கான்மலர்பணிந்துசொற்றான்.

தொண்டர்கண் மெய்யினுளுந்துலங்கிலக்கணங்களெல்லாங்
கொண்டவின்னவன்றனன்பை குறித்துணர்ந்தமல மூர்த்தி
எண்டவி ரன்ப வேண்டு மிதயத்தை யுரைத்தி சோறும்
உண்டபோ கத்தோ முத்தி யுயர்விலோ விருப்பே துற்றாய்.

கரைமதி யன்ப வென்னக் கழறலுங் கண்ணீர் வாரா
வுரைநனி நடுங்க விந்த வுலகுறு போகம் வேண்டேன்
விரைமல ரவன்றன் வாழ்வும் விரும்பிடேன் விமல நின்னைத்
தரையிடைக்கண்டும் பொய்மைவாழ்வினிற்றருக்குவேனோ

இனிப்பிற வாம னின்னை யிறைஞ்சிநின் னடியிற் சேர்ந்து
தனித்துற விழைந்தேனெற்குன் றண்மலர்நினைவையன்றிப்
பனிப்புறத் தக்க வொன்றும் பகரலென் பிரம மூர்த்தி
சனிப்பிலார் விருப்ப மார்ந்தேன் றரையிலென் றுரைத்த
போதில். (20)

உள்ளகங் கசிந்தெம் மையன் உணர்த்தினன் பொருள்கண்
[மூன் றுங்
கள்ளமின் றதனை யோர்ந்தான் காலிணைவணங்கப் பின்னர்
வள்ள லு மருட்க ணாட்டி வாவிரென் றருளி யன்பிற்
றுள்ளியவெழுத்தைந் தாலுந் துலக்கினன்சமா திதன்னை.(21)

அன்னது முணர்ந்தா னைய னதன்பின்ன ரமல மூர்த்தி
இன்னவரு றிருத்தி யென்ன வேகலு மைய னஞ்சிச்
சொன்னதென்கனவோவன் றித்துலங்கியநினைவோபின்னை
என்னவீ தென்ன நாடி யெழுமிறும் பூத னாகி. (22)

பொன்னணி வள்ளத் தோடும் போந்தகல் குரவன் றன்னை
யுன்னினா னுன்னி யுன்னி யுளங்கசிந் துருகி வாடி
உன்னையான் மறவே னம்ம வொருவரு மறியா வொன்றை
யென்னிடை யளித்தா யெங்ங னேகினா யென்று நைந்தான்.

நைந்துபின் றெளிந்தீ தெல்லா நான்மறை முடிவாய் நின்ற
இந்துசே கரனைப் பாடு மெம்மிறை யான காழி
வந்தருண் மெய்ம்மை ஞானப் பாலரு வாயர் செய்த
விந்தையே யென்று நாடி விழிமலர் குவித்துற் றானல்.(24)

உத்தமர்க் குள்ள மேன்மை யுயர்வெலா மளிக்கு நாலாஞ்
சத்தினி பாதந் தன்னைச் சார்ந்தவ னாத லாலே
வித்தக ஞான மூர்த்தி விளக்கிய படியி னின்றே
யொத்துறு சமாதி தன்னி லுயர்பர சிவனோ டுற்றான். (25)

நீருறு பாலும் பாலி னிரையுறு சுவையும் போல
வாருறு மின்ப வீட்டி லையனை யணைந்தா ரின்பச்
சீருறு நிலைய னாகிச் சிவமென வறிவான் மன்னி
ஏருறு பரமா னந்த வின்னமு தருவ மானான். (26)

தத்துவ மெல்லா நீங்கித் தனிப்பர சிவத்தோ டொன்றா
மத்து விதத்தை யங்ங னடைதிரி புடியு நீங்கி
வித்தக னமலா னந்த விபூதியே வடிவ மாகி
உத்தம சிவச மாதி யுள்ளனு பவத்த னான். (27)

சிவகர ணத்தி னின்ற சீரியோர் திறங்க ளெல்லாம்
பவமறப் பரமா னந்தப் பரம்பொருள் செயலா மென்ன
உரைமறை முடிவின் வண்ணா முற்றவன் செயல்க ளெல்லாம்
தரையிடை யவனேசெய்தான் சாந்தருக்கெவரேசெய்வார்.

தனக்கெனச்செய லொன்றின்றித் தம்பிரான் செயலேயாகி
வனத்திடை யிருப்பான் போல வாட்படை வீர ரோடும்
உனற்கருஞ் செயல னாகி யுற்றன னுறுமங் நாளின்
மனக்கிடையூறிலாதான் மாண்பினையுணர்ந்தார் பல்லோர்.

என்னிவ னம்போ லன்றி யிருக்கின்றா னிருகண் மூடிப்
பொன்னிவன் மேனிக் கொவ்வாப் பொருளதே யிளமை [மிக்கான்
என்னினு மடவா ராசை யிடத்திலா னிவன்மெய் நோக்கில்
துன்னிய பேடி யல்லன் சூரனே யாவன் மன்னே. (30)

---

## துறவெய்து சரிதை.

---

என்றெணி யச்சத் தோடு மிருக்குநா ளொருநாட் காலைப்
பொன்றிணி கவயத் தோடும் போர்த்திறப் பழக்கங் காண
நின்றுள தலைவன் செய்கை நேரிலா னுணரா னாக
வன்றவ னுருவாய்ச் சென்றா னாதியம் பரம மூர்த்தி. (31)

ஒருவிகற் பமுமங் கின்றி யூணர்கோ மகன்முன் னெய்தி
நிருவிகற் பத்தி னுற்றான் நீள்செய லனைத்துஞ் செய்து
பொருவிகற் பத்தின் மிக்க புகழ்ப்பரி மாவை நீங்கி
வருவிகற் பத்தி னானும் வாண்மினி னகன்றான் மாதோ.(32)

கண்டவவ் வூணர் கோமான் கைபுடைத் தென்னீதென்றான்
மண்டெரி விழியின் வீரர் மற்றவர் பெரியோ ராண்டே
யுண்டவர் சமாதி தன்னி லுற்றவர் பரனே யென்னக்
கொண்டவாச் சரியத் தோடுங் குறுகினானவர்தம் மாட்டே.

சென்றிவ னோக்குங் காலைச் சித்திர விளக்க மென்ன
வொன்றின னைய னேரி லுற்றவ னுயிரி லாமை
என்றினத் தவர்க்குக் கூறி யெதிருளா னொருவன் றன்னைச்
சென்றியான் விளித்ததாகச் செப்புதிபிடகர்க்கென்றான். ()

அவன்மொழிப்படியே சென்றோ னழைத்திட வந்தவூணன்
இவர்திறம் பலவாற்சோதித்திருந்தனன் யோகத்தென்னத்
தவரென வறிந்து வாளா சார்ந்தனர் தத்தம் மில்லிற்
புவனமெ லானார் மீட்டும் புக்கனர் சவிகற் பத்தில். (35)

விழித்தது கண்ட வீரர் விரைந்துசென் றடியிற் றாழாப்
பழிச்சின ராகி முன்னர் நிகழ்ந்தன பகரக் கேட்டே
இழிச்சவென் றனக்கோவெம்மா னெய்தினனென்னநாணி
விழைச்சிலார் வேலை நீங்கி விருப்பகன் றுற்றார் பன்னாள். ()

துறவற முறையி லெய்தித் துரியனைக் கூடி யின்ப
நிறைவினி லுறலும் பாச நீங்கிய தாகத் தேகத்
துறையபி மானத் தோடு முறுகுண மறந்த வந்நாள்
அறைகழல் வடுகன் போல வாயினா னமல மூர்த்தி (37)

தன்னுட னெதிருஞ் சாணுத் தனிநிலை யுற்ற மேலோன்
முன்னுடைக்குணங்களீங்கிமுக்கணெம்பெருமான்போலத்
துன்னுறு நிலைமை யோரார் சொல்பரி யாச மாதி
யன்னவர் தமக்கே யாக வாக்கின னுதி சைவன். (38)

சிவன்றிற மீதென் றோராச் சிறியர்கள் நிற்க வொப்பி
லிவன்றிற முணர்ந்தாரெல்லா மிணையடிபணிந்துவாழ்ந்தார்
தவன்றிரி தெருவில் யாருந் தாழ்வுரை புரியா ராகி
யிவன்றனைக் காண வார் வாரிங்ஙன நிகழு நாளில். (39)

துருக்கரி லொருவன் மிக்க துடுக்கினன் பணத்தான் மிக்
[கோன்
இருக்குமத் தெருவினூடே யெய்துமின் னவரையோர்நாள்
முருக்கிதழ்க்கனிவாய்வெண்மைமூரலாளொருத்திகாணூஉ
வெருக்கியின் னவனை யோட்டென் றிசைத்தனள் கணவன்
மாட்டே. (40)

ஆண்டவ னுளென் றோரா வசடனு முனிவுற் றூளைத்
தூண்டின னவனுங் கோணி துன்னுமூ சியினுன் மேலோர்
நீண்டமெய்ம்மறையைப்போழவெறிந்தனனெறிந்தவத்தை
மீண்டிறைவிலக்கிப்பொல்லான்மேனியிற்படுமாசெய்தான்.

இழுக்கினும் வாரா தாகி யிசைந்தது மன்றி நோவு
மழுக்கடை மனத்தாற் கம்ம வதிகரித் திட்னு மோடிக்
கழுக்கடைக் கையன்றெண்டன் காலிணை பணிந்துநாயேன்
இழுக்குடைச் செயலை மன்னித்தின்னருள் புரிதியென்றான்.

கண்ணினாற் சிறிது நோக்கக் கழன்றதவ் வூசி பின்னர்
எண்ணினா லறியான் பேரா லிவனொரு மருந்தி யாக்கி
உண்ணிலா வியமெய் யன்போ டுற்றன னொருநாள் வீதி
நண்ணியே கிடப்பக் கண்ட காவல னடுங்கச் சீறி. (43)

வழியினிற் கிடத்த லொல்லா வண்டிக ளுடனே போவார்க்
கிழிசெயல் செய்ய லேடா வெழுந்திரென் றிசைத்தா னாயும்
மொழியறி பரம ஞானர் மோனமாய்க் கிடத்தல் காணாஉ
விழியிணை செவந்துமெல்ல வீசினன் பிரம்பாலோங்கி.(44)

அடிப்பதற் கெழுந்த கைமுன் னசைகிலா தாக வுள்ளத்
திடிப்புடன் வணங்கமுன்போ லிசைந்தது கரம்பினன்னான்
மடிப்புறு தலைய னாகி மடங்கின னிவரும் பின்றைத்
தடிப்புறு நிழல்போ லெங்குஞ் சரித்தினர் சரிக்கு நாளில்.()

மக்கநாட் டுதித்துச் சீர்த்தி மதீன்ர சுரிமை பூண்டோன்
தக்கவா றியற்றி விட்ட சமயத்தா னாகி யோகிற்
புக்கவ னாகப் பல்லோர் புகல்மஸ்தா னென்பான் பன்னாள்
சக்கடைத்திருத்தான்மீட்டுஞ்சார்ந்தனன்வெளியிற்பின்னை.

அடிக்கடி யிவ்வாறாக வமைதலு மொருநாட் டோபா
படிக்கிடைக் குழியி லின்னான் பாறிய திறத்தை வாயால்
முடக்கிடா துரைத்தா னாகு முன்னுயிர் துறந்த தென்னாக்
கடிக்குகை திறந்து பார்த்துக்கண்டனர் பிணத்தையம்மா.

பின்னொரு தினத்தில் வேலை பிறங்கிய பெரிய ஞானி
தன்னொரு மடத்திற் கட்டுந் தனிக்குகை யகத்தி லார
லான்னொடுமோர்ந்தான்போலவுவன்வளை யெலியேயென்ன
வன்னதை யறிந்தமேலோ னணைந்திறையடியிற்றாழ்ந்தான்.

இறைபணி பலவும் வேளைச் சேரியி லியற்றி யாண்டே
மறைவறப் பரமா னந்த மாகட லதனி லாழ்ந்தான்
பிறையணி சடில மில்லாப் பெரியவன் பின்னு மங்ஙன்
உறைவதோர்குலாலன்றிண்ணையிடத்ததாவுற்றுனோர்நாள்.

அம்மனைக் குயத்தி பாதி யாகிய விரவி லெய்தி
யிம்மனை வெளியிற் சோதி யிலங்கிய தென்ன வில்லோன்
விம்மித மெய்திக் காண விழைதலு மறைந்து பேசுகி
யெம்மிறை யுருவாய் நின்றோ னேகினன் வண்விட் டம்மா.

கண்டிலன் றிகைத்தா னென்னே காரண மறியே னந்தோ
வண்டினார்க் கருளு மூர்த்தி யருட்கடை விழியா னோக்கில்
உண்டியான் மைந்த னென்ன வுறுவனே மாதே நின்னாற்
கண்டிலா தவரே யானார் கருணையார் தோபா வென்பார்.

என்றவன் கழற வன்னா ளிடருறு விடிந்த பின்றை
மன்றினி லிருந்த யோக மீதவ னருகி லெய்தி
என்றவக் குறையை நீக்கி யின்னருள் புரிதி யைய
வொன்றும்யான் குற்ற நின்பா லுஞற்றிலேனென்று தாழ்ந்
[தாள். (52)

பேரிளம் பருவத் துற்ற பெண்மொழி கேட்ட வையன்
கூரிள முறுவல் காட்டிக் கொடியிடை மடவாய் வெந்தை
பாரிதி லுளவோ வென்று பகர்தலுந் தடாவு னோக்கி
நீரியை வல்சி சில்ல வெடுத்தனள் நெடுங்க ரத்தால். (53)

காட்டின ளையற் கத்தைக் கவர்ந்தனன் மீட்டும் வாயி
லூட்டின னுண்டா ளன்னா ளுற்றனள் கருப்ப மன்றே
வீட்டிய லுணர்ச்சி மிக்க வியனிலை யொருவன் பத்தாய்க்
தாட்டிய மாதத் தன்னாள் கருவினின் றுதித்தா னன்றே.

உதித்தவன் கலைகளோரா வுயர்துற வறத்த னாகிப்
பதிப்பொருளுணர்ந்து வீட்டைப் பற்றினான் ஞானிசேடத்
துதித்தவன் பிறவி வாயி லுறுவனோ வொருமா வோடு
மதித்துள சிவயோ கிப்பேர் மன்னினோ னின்னோ னன்றே.

ஈதிவ ணிற்கப் பின்னு மெய்தியோர் குயவன் றன்னை
மோதின னவனஞ் ஞான்றே முடுகினன் வெளியூர் தன்னில்
ஆதிபி னுருவ மானோ னவன்மனை மகாணைக் காப்பான்
தீதிலவ் வீட்டின் முன்னர்ச் சேர்ந்திருந் திட்டா னன்றே.

சக்கிரி மனையி லுற்ற தம்பிரான் செயலை யோர்ந்தார்
தக்கவா றவட்கு வேண்டுந் தனமறைந் தளித்த போதிற்
றுக்கமி லமலன் வேறோர் சூழலிற் புகுந்தா னாகி
மிக்கசீ ரடியார் துன்பம் நீக்கியே மிளிர்ந்தான் மாதோ. ()

சுணங்கனுங்கரமுந் தம்மைச்சூழ்ந்துறத்தலைமேலோடொன்
றிணங்குறச் செல்லுங் காலை யெதிர்வரு பவர்க ளெல்லாம்
வணக்கின ராகப் போவார் வாரிதி யோரத் தோர்நாள்
குணங்கடந் துற்ற யோகி குறுகினான் குறுகும் போதில். ()

கண்டவ ரான வூணர் கைகொட்டி நகையா வந்தோ
வொண்டவர் குடிக்கக் கூடா வொருவித மதுவை யீந்தார்
தண்டலின் றிவரு மத்தைத் தாங்கிய வோட்டி லாக்கிக்
கொண்டரு குற்ற நாயைக் குடியெனக் குடித்த வம்மா. ()

சூரர்க ளுண்ணும் போதிற் சூழ்ந்தவர் கண்ணுக் கெல்லாம்
சீரிய பாலாய் நின்ற சிவபரஞ் சுடரின் மேன்மைக்
காரிய முணர்ந்தப் பின்னுங் கடையர்கள் மதுவை யீந்தார்
ஆரிய னதுவு நாய்க்கே யருந்தயி ராக்கி விட்டான். (60)

ஐவகைப் பாவ நாப்பண மர்வது கள்ளே யாக
வெவ்வமில் யோக ரெங்ங னிசைந்ததை நுகர்வ ரந்தோ
தெய்வமில் லென்று நிற்குஞ் சிறியரே மதுவுண் பார்கள்
ஔவிய மவித்தோ ருண்ண லாகுமோ வரகா தன்றே.(61)

## வேலூநற்சரிதை.

இன்னணம் பலவா றுக வியலிறும் பூதை யெல்லா
முன்னவ னிவ்வுய் நின்று முறைமையாற் புரியுங் காலைத்
தென்னவன் கூனை நீக்குந் தேசிக னருளைப் பெற்ற
முன்னவன் வீதி மாடே முடுகினன் முடுக லோடும். (62)

முகமன்றி மற்றை யாவு மூடிய வொருத்தி யோடுந்
தகவொன்று மிரத மீதாய்ச் சார்தரு மூண னொக்கா
மிகவென்றனதிகாரத்தின் மேன்மையைக் கெடுத்த பிச்சன்
தகவிங்ங னுறுதல் கூடா சடுக்கென வகற்றீ ரென்றான். ()

காவலர் முடுகி யையன் காதன்மை யில்லா மூர்த்தி
யேவலிற் போகா னென்ன விசைத்தலுங் கடுத்தவ் வூணன்
நாவலர் புகழ்மே லோனை நல்லயத் தளையி லாக்கிக்
கூவினன் சிலரைக்கொண்டுபோகெனக்குறித்துப்போனான்.

போனவன் சிறைக்க ணைந்தம் புனிதனை யடக்கி யிந்த
மானவன் பெருமை மேலிற் காண்டும்யா மிங்கே யென்னு
வீனமார் மொழிகள் கூறி யேகினுன் பரிதி மேலோன்
நானகல்கின்றேனென்னுநடத்தல்போன்மறைந்தானன்றே

இனன்மறை வாக யாண்டு மிருள்மலி வாயிற் றம்ம
மனமரு ளிடையி லின்றேன் மற்றிரு ளன்றி யின்மை
தனமுணர் முறையிற் காட்டச் சார்ந்தன தீப சாலம்
கனமகல் மதத்தோர் தங்கள் கடவுளர் நிலைமை போல. ()

பின்னரின் மதியத் தோடும் பிறங்கிய வுடுக்கள் வானிற்
றுன்னின வாக யாருந் துஞ்சின ருணன் பையத்
தன்னெழின் மனையா ளோடுந் தகவுறப் படுக்கை வீட்டிற்
றுன்னின னேக்குவங்கன் றாயவ ரிருக்கக் கண்டான். (67)

கரும்பொன்சங் கிலியை யிட்டு கட்டியான் சிறைக்க ணிட்
[டோன்
வரும்படி யேது மோரேன் வையகத் தில்லாச் செய்கை
தரும்பெரி யவனென்றோரேன் சார்ந்தடி பணிவேனென்று
விரும்பின னாகி யெய்தி வேணவா வணங்கி னுனல். (68)

புகழறியாத மூடன் புரிந்தன பொறுத்தி யென்று
விகழறி யாத வூண னிசைத்தனன் சிறைக்க ணெய்தித்
திகழறி வாள னாகித் தெரிந்தனன் புதவின் பூட்டை
யகழறிவானேனந்தோ வருந்தவர்ப்பிழைத்தேனம்ம. (69)

அடைகத விருக்க வேறு யகல்பவர்த் தடுத்தென் விந்தை
புடைகதச் சுவரும்மற்றைப் புறங்களு மேலு மோர்ந்தேன்
இடைவெளி காணே னெங்ங னெய்தின ரிந்து மார்க்கத்
துடையவர் செயலிதேகொ லொன்றும்யா னறிகி லேனே.

எனப்பல வெண்ணி யிந்த வியலனை யிவ்வூர் நீக்கி
வனத்திடை யேனு மின்றி வலிதலா வூரிலேனுங்
கனத்துடன் விடுத லேநற் காரிய மென்ன வோராச்
சனத்திடைப் பலரைக் கூவிச் சாற்றின னிந்த மாற்றம். ()

சோவண வுடையு மின்றிக் குலவுமிம் மேலோன்றன்னை
நாவணமொழியான்மெல்லநயந்திவ்வூர்ப்புறத்திற்சேர்த்திர்
ஏவண விழியா ளாமென் னில்லவள் பயந்தாள் சால
வாவண மெதற்குப் போதி னையனைக்கொண்டென் றுனல்.

உடன்படர் சகட மொன்றை யுத்தமர் முன்ன ராக்கி
மடன்படுமடியேஞ்சொல்லுமார்க்கத்தில் வருதல் வேண்டுங்
கிடன்படு மிவணீ றாற்றாற் சேர்துரை மார்கட் கெல்லாம்
இடஞ்சலா மதனா னீரு மேதுதி ரென்றார் வீரர். (73)

என்றவர் வணங்கிக் கூறி யிரத்தனு முனிவர் கோமான்
நன்றெனச் சகட மொன்றி னண்ணின னுடனே யன்னோர்
முன்றொடர்ந் ததனை யோட்டி முறைமுறை யூர்கள் காட்டி
நின்றனர வற்றி லொன்று நேர்ந்தில னிறங்க வையன். (74)

கார்பெறு பொழிலின் மஞ்ஞைகந்தவே ளிருப்பிதென்னாச்
சீர்பெறு மகவல் காட்டிச் சிறந்துறக் குறிஞ்சி யாண்டு
மேர்பெறு மவன்வி ழாவுக் கியைதல மிதுவே யென்னப்
பார்பெறு புகழ்வே லூரின் பக்கமாய் நணுகுங் காலை. (75)

தன்பொரு ளோடுமையன் சடக்கெனக் குதித்துப் போதிர்
என்பொருட் டிருத்தல் வேண்டா வெனக்கிவ்வூர் தக்க தெ
[ன்னாத்
துன்பமில் பெரியோன் வந்தோர் துலுக்கன்வீட் டகத்துப்
[புக்கான்
அன்பிலா ராகி விட்டோ ரடித்தனர் தடிகள் கொண்டே.

அடிதடி வருத லெல்லா மவர்மிசை யன்றி யில்லை
பிடிபிடி யென்று போவோர் பிடிப்பர்வேற் றவரை யிங்ஙன்
கடிபிடி தமதே யாகக் கால்கர மொடிந்தோ ராகி
யிடியிடிவகையிற்கூவியிரைந்தனர்சூழ்ந்தார்பல்லோர். (77)

கண்டன ராடை யின்றிக் கடுந்துற வெய்தி நின்ற
தொண்டரை வேலை யுள்ளார் தூயமா பெரியோ ரென்னா
வண்டினர் துலுக்கர் மாடே யறைந்தனர் பற்பன் மாற்றம்
பண்டவர் கொண்ட சீற்றம் பாற்றின ரானார் பின்னை. (78)

அடிகளவ் வூரிற் பன்னா ளமர்ந்தனர் சுழலுங் காலை
கடிகொளுந் தும்பை சூடுங் காவலர் படைஞர் பல்லோர்
கொடிகொளு மிஞ்சி யுள்ளே குடியிருந் துள்ளா ரங்ஙன்
படிகொளும் புகழெம் மையன் படர்குவன் பற்பல்காலும்.

சிலரடி பணிவர் பல்லோர் சீயென வெறுப்பர் பொல்லாச்
சிலரவ மான மாகச் சீறுவர் சிலரோ வென்னில்
அலரடி யிறைத்துப் போற்றி யன்பொடு வழிபா டாற்றிக்
கலரகல் வண்ணஞ் செய்து கனியமு தருத்து வார்கள். (80)

சீருறு கூல வீதி செல்லுநா ளைய னன்பால்
வாருறு தவசஞ் சேர்ந்த வாணிப னிலாபம் விஞ்சி
ஆருறு முறையை யோர்ந்தா ரையனெங் கடைவ ராமற்
சாருறு பாவஞ் செய்தேந் தரணியி லென்பா ராஞர். (81)

## வேறு.

தூர்த்தருங் கொடியருந் தூய்மை யில்லராய்
ஆர்த்தொரு புறத்திலார்ந் தறைவ ரின்னணம்
நார்த்தொடுத் தீர்த்துமோ நல்விட மார்த்துமோ
பார்த்திவ னுமைமினே பையநாஞ் செய்யவே. (82)

## வேறு.

கொடுவிட முண்டு சாவாக் கொள்கையோ னவ னுயின்
அடிமைநா மவற்கே யாவோ மன்றெனிற் புதைப்போமெ
[ன்னு
வடிசுடர் வாளார் பல்லோர் வாங்கினர் விடத்தை யூணிற்
பொடிபடுத்த மைத்தார் கொண்டு போந்தனர் குரவன்
[முன்னர். (83)

அன்பொடு வணங்கு வார்போ லபிநயம் புரிந்தேயோட்டிற்
றின்பொரு ளிட்டா ரையன் றிருமுக மலர்ச்சி காட்டி
யின்பொடு கரமு நாயு மிணங்குறப் புசித்தலோடு
முன்பவர் கொண்ட வாழ்வு முடிவுற மலனோ யுற்றார். (84)

## வேறு.

பேதியும் வாந்தியும் பெருகிப் பாவிகள்
ஏதினிச் செய்வதென் றெண்ணு முன்னரே
ஆதியி னேவலா லடைந்த காலனும்
போதிர்நீ ரெமபுர மென்னப் போயினர். (85)

ஒட்டுற வாசுவே யுற்ற வர்க்கெலாம்
விட்டில வுபிரிதென் விரைந்து பேதியேன்
கிட்டிய தெனவிளைய்க் கிடந்த மரிந்தருக்
கெட்டின விடம்பெரி யோருக் கேய்த்ததே. (86)

கூடினர் பலரினிக் கொடுமை நம்மையுந்
தேடிவந் தணையுமுன் றெய்வ மன்னவன்
பீடியல் பாதநாம் பிடித்தல் வேண்டுமால்
வாடிய வுள்ளினீர் வம்மி னென்றனர். (87)

சென்றனர் கண்டனர் திருவ டித்துணை
நன்றென வணங்கினர் நயந்தெம் மையனே
சென்றனர் பலர்வினைச் செறுக்க வெண்ணினோர்
நின்றவர் தம்முயிர் நிறுத்த னின்கடன். (88)

என்றவர் புகல்மொழி யேற்ற வைய்யனும்
தன்றிருக் கையினாற் சாந்தங் காட்டினன்
நின்றவ ருயிருட னிலைத்திட் டார்பினர்ச்
சென்றனர் வந்தவர் திருத்த னுற்றனன். (89)

பற்பல ரொருதினம் பாறல் கண்டவ
ரற்புத மெய்தின ரகத்தி லேயனைப்
பொற்பொடு போற்றினர் புகழ்ந்து வாழ்த்தினர்
உற்பவ மகல்வதற் குறுதி சூழ்ந்துளார். (90)

இன்னண முற்றநா ளிவர்வ ரத்தினல்
முன்னரே பிறந்தவோர் முடக்கு ழந்தையை
யன்னதன் றந்தைதா யடைந்து முன்னிடாச்
சின்னவன் காலிலான் செய்வ தென்னென. (91)

அடிபணிந் திருவிழி யருவி கான்றிட
நெடியவன் முன்னரி னின்ற காலையிற்
படியுறை சுணங்களைப் பைய வென்றனர்
கொடியவான் ஞமலியக் குழவி பாலதாய். (92)

காற்றுணை நாவினுற் கவிந்து நக்கலும்
ஆற்றலுற் றனபதக் கவனெ ழுந்தனன்
காற்றிய துன்புடன் கண்ட தந்தைதாய்
சாற்றினர் துதிபல தாய னன்முனம் (93)

போதிரென் றேதினின் புனித மாதவன்
சோதியை வணங்கியே தூயர் சென்றனர்
ஈதிவா றுதனு மெய்தி யோர்மகன்
நீதியில் வழுத்தியே நேரில் நின்றனன். (94)

## வேறு.

நின்றவன் றன்னை நோக்கி நெடுந்தகை யருட்கண் கோட்டிச்
சென்றுநின் வேலை நாளைச் செய்மதி யெனவு மன்னன்
நின்றில னில்லத் தேகி நீள்குழன் மனைவி யோடு
மொன்றின னிவ்வா றுக வுரைத்தன னுவகை விஞ்சி. (95)

வெள்ளியைந் நூறு மாதம் விளங்கயா னரசாங் கத்திற்
கொள்ளுத லுடையே னனேன் குற்றத்தாற்கடிந்தாரன்னோர்
தள்ளியோர் வருட மின்று சாய்ந்தது தகவி லாதேன்
எள்ளிய நிலைய னானே னிருந்தது முண்டு தீர்த்தேம். (96)

எற்றினிச்செய்வதென்னவெண்ணியான்தோபாமுன்போய்
நிற்றலு மந்த மேலோ னேரிலாய் நாளை வேலை
யுற்றனை பார்த்தி பென்ன வுரைத்தன னுறுமேல் ஞானம்
பெற்றவர்க்கிரண்டுமாதம்பெறும்பணமளிப்பேனென்றான்.

அரசினர் கடிதத் தோடு மடைந்தன னொரு வனத்தில்
உரைசெய்த முனிவன் வாக்கி லுற்றதே யிருக்கக் கண்டு
நிரையவன் முன்னர்ச் சொன்ன நேர்மையிற் பின்ன ராகி
விரையவத் துலுக்க னில்லம் வேண்டியே வாங்கி னனால்.

ஆயிரம் வெள்ளி பெற்றே யகன்றனன் யவனவன்பின்னர்த்
தூயவற் காக வத்தைத் துலக்கின னின்னோ னத்தின்
மேயினர் முன்னிற் போல மேதையோ ரடைந்து போற்ற
லாயின ரந்நாள் வந்தாங் கடைந்தன னொருமா யோகி.(99)

உத்தம வதிகா ரத்தோ னெப்பிலாத் துறவிற் கன்னோன்
சித்தநன் னதைப் பேராற் சிறந்தவ னறத்தி னிற்போன்
சுத்தநற் றோபா வுக்குத் துலங்குநற் சமாதி யொன்றை
யெத்திறமேனும் யானேயியற்றுதல்வேண்டுமென்ன (100)

ஊர்பல திரிந்து பற்ப லொண் பொருள்சேர்ப்பான் காஞ்சி
யூர்பல திறத்து மேன்மை யுற்றதென் றவணுற் றங்கு
ணர்தக சில னன வரிமதத் தோன்பா லெய்தி
நீர்நம தோபா வுக்கு நெடும்பொருள் தருதி ரென்றான். ()

அவன்விழி செவந்து நோக்கி யாரடா வங்கே யிந்தச்
சிவன்மதப்படிறன் றன்னைச் சேர்வெளியென்னவந்தோர்
தவன்நிலை யுணரா ராகிச் சாடினர் தள்ளி விட்டா
ருவன்மன நனிவ ருந்தி யுற்றனன் சூழலொன்றில். (102)

காஞ்சியி னடப்பதெல்லாங் கருணையார் தோபா மூர்த்தி
வாஞ்சித வேலூ ருற்று வாயினாற் புகன்று நின்றார்
மாஞ்சில் னேனா மந்த மறையவன் சுரநோ யாகி
யேஞ்சவா றெதனைச்செய்து மேகிலதாயிற் றந்நோய், (103)

ஆயுணா லோர்ந்தோ னெய்தி யவன்கர முதல நோக்கி
நீயிதைச் சுரமென் றெண்ணேல் நேரிலா ராரோ நின்னை
வாயினாற் சபிக்க வந்த வகையன்றி வேறின் றென்றா
ணையபோ துணர்ந்தா னன்னானருந்தவன் றனைத்தேடுற்றான்.

நேடியெஞ் சுரநோய் நும்மால் நேர்ந்ததாவறிந்தேனித்தை
வீடிடப் புரிதி ராகில் வேண்டுவ தருவ னென்றான்
றோடியல்மொழியானன்பன்சொல்லினனொன்றுமோரே
னேடியல்தாராய்தோபாவென்பவரெனதுதெய்வம். (105)

அவர்பெயர் கூறி நீற்றை யளிப்பனீ யுண்ணிற் போநோய்
கவர்படிற் போகா தென்னாக் கழறினன் நீறு சாத்தி
யிவறிநீ போதி யென்றா னேகின சுரநோ யந்நாள்
உவகையுற்றவன்வேலூரையுறறடி பணிந்துபோற்றி. (106)

முன்னவன் கோயிற் கான முயற்சிகள் பலவுஞ் செய்து
பின்னவ னகன்றா னிற்கப் பெரியவர் சுகச மாதி
தன்னினின் றகலா ரானார் சாட்டியா லடித்தோன் பாரி
பொனனொளி மகவொன்றந்நாட் பூத்தனள் பூத்தகாலை.()

ஐய்யனை யடித்தசாட்டி யடித்தழும் பதனிற் கண்டு
பையவிவ் வேலூ ரெய்திப் பாலனைக் கான்முன் னிட்டுச்
செய்யவேண் டுவவுஞ் செய்து சிறுக்கனோடகன்றூர்சென்னை
யுய்யவே விருப்ப முள்ளா ருவனடித் தொண்ட ராஞர். ()

ஊனுண வொருவ னெய்தி யுவப்புடன் வணங்கி யைய
நானுண வளிப்பே னென்று ணுதனு மூனே டாயி
னேனுண திருப்பே னென்று னிவன்மனையகத்துப்போகித்
தானுணப் பொருளைக்கொண்டுசார்ந்தனன்சார்தலோடும்

கல்லெடுத் தோச்சி யன்னாற் கடிந்தனன் கருணை வள்ள
லில்லெடுத் திரங்கி நின்று ரெய்தினர் பல்லோ ரங்ஙன்
சொல்லெடுத் தகற்று தூசென் றுரைத்தனன் றாய மூர்த்தி
யில்லெடுத்தவன்கொணர்ந்த விறைச்சியைக்கண்டானில்லை.

விம்மித முற்றுன் மாடே மேவிய தந்தச் செந்து
வெம்மிறைகருணையீதென் றிறைஞ்சி யன்னவர்கள்போனூர்
செம்மறி யளவோ வெங்க டேசிகன் செய்த சித்தி
அம்மவெத் தனையோ வாகு மறிந்தன வுரைத்தேனிந்நாள்.

கொன்றையம்பொழிலார்குப்பக்குடிமகளொருத்திசிந்தில்
ஒன்றியவிதை போகட்டவொண்குடத்தரவான்மாண்டாள்
அன்றவட்பயந்தோர் ஞானவண்ணலாந்தோபா முன்னர்ச்
சென்றிசைத்துடலையிட்டுத்திருவடிபணிந்துநின்றூர். (112)

நின்றவ ரழுதல்காணூஉ நேரிலா னருளாற் பார்த்தான்
ஒன்றிய விடவேகம்போ யுயிருட னெழுந்தாள் கன்னி
யன்றவ ணிதனைக் கண்டோ ரற்புத நீரராஞர்
கன்றினோர் மகிழ்வுவிஞ்சிக் கான்மலர் வணங்கிப் போனூர்

பூதர மென்ன யாண்டும் பொலிபல நெல்லின் குப்பை
கோதற விலங்கு மேன்மைக் கூவவாணிக னோர் லோபி
மாதவன் கொண்ட கண்டை மறித்துடன் பிடுங்க வன்னான்
ஏதமில் கடை யப்போதே யிடிந்தழிந் தொழிந்ததம்மா.()

மற்றிதைக் கண்டோ ரெல்லா மனமிக நடுக்க முற்றார்
பிற்றைநா ளெண்ணெய் விற்போன் பெருங்கடை யகத்
[துச் சென்று
சற்றெனக் கெண்ணெய் தாரா யென்றனன் றரும மூர்த்தி
குற்றமி லவனு மெண்ணெய்கொண்டன ரயலோரென்றான்.

இம்மொழி கேட்ட வைய்ய னில்லகத் தெய்தி யெண்ணெய்
விம்முறு குடங்க டம்மை வீழ்த்தினன் கவித்து மேனி
யம்ம மற்றதனி னுள்ள வழுகிய தயில மெல்லாந்
தம்முட லதனி னின்றுந் தனி மலையருவி யென்ன. (116)

நீர்வடி க்காலிற் சென்ற நேயத்தைக் கண்டோ ரெல்லாஞ்
சீர்பெறு மறையி னேக்கச்செறிகுடத்தெண்ணெயெல்லாம்
ஏர்பெற நிறைந்து விம்மி யிருந்திடக் கண்டெ மையன்
பேர்பெறு சீர்த்தி கூறிப் பெய்மல ரடியில் வீழ்ந்தார்.(117)

வள்ளியை முருகன் வேட்ட வளம்பெறு சிற்றூர் தன்னி
னுள்ளவன் வேமனப்பே ருறு வனை யுளத்துக் கொள்ளா
வள்ளலே யருளா யென்ன வரைக் குகை யிடத்தி னோர்நா
ளெள்ளலில் வேம னெய்தி யிவற் குபதேசஞ் செய்தான். ()

நற்றவ வேமன் சொல்லை நயந்தரி பத்தனாகி
யுற்ற நற் றுறவ னாகி யுயர்வள வேலூ ரெய்திக்
குற்றமில் பசனைக் கூடங் குலவிட வனே மாக்கி
யறறமி லிசையாற் பற்பலரி திருக்கீ தங் கூறி. (119)

நரசிங்க தாசனென்னு நல்வர கவியாய் நின்றேன்
விரைசெறி கொன்றைமாலை விமலனை யடைய வெண்ணித்
தரைபிடை யுயர்ந்த தோபா சாமியே சரண மென்ன
வுரையினி லடங்கா வீச னுடனுறு முபாயஞ் சொற்றான்.

மாசிவ யோகி யாகி மற்றவன் சிவத்தோ டுற்றான்
ஈசனே டொன்றாய் நின்ற விம்முனி யடியைப் போற்றி
யாசிலா நிலையினுற்று ரறி வினுற் சிவமாய் நின்றான்
தேசுருக் கண்டா ரெல்லாஞ் சிவனடிக் குரிய ரானார்.(121)

நல்வெழி லரசம்பட்டி னரணற் கடிமையாகி
யில்லறத் திருந்தம் மாய னிணையடி துதித்த சீராற்
தொல்லை வல் வினைகள் போகித் தூயனு மரங்கதாசன்
அல்லலில் தோபா சீர்த்தி யமைவுறு பாடல் செய்தே.(122)

இசை யினிற் புகுத்திப்பாடி யிணையடித் தொண்ட னாகு
நசையின னுகவந்த நல்லவன் றன்னைக் கூவி
யிசையுறு விகற்பமாகி யிருந்தரு ளிறைவன் றன்னைக்
குசையுறு மதியாற் கூடுங் குறிப்பினை விளக்க வன்னேன்.

மாசிவ யோகி யாகி மாதொரு பாகன்றன்னை
ஏசில் கைவல்யங் கூறு மியல் பினில் வணங்கியோகில்
ஆசிலா துற்று வீட்டை யடைந்தன னரிதாள் போற்றுங்
காசிலாச் செயலா லிந்தக் காட்சி யன்னவன் பெற்றானல்.

இறையுட னென்றி யொன்று திருந்திடு பெரியோர் தம்பா
னிறையு மெண் சித்தியென்ன நேரிழை பாகன் சொற்ற
மறைமொழிக் கிலக்காய் வேலை மாநகர் முன்னாட் செய்த
குறைவறு தவத்தி லங்ஙன் குலவி னெங்கள் தோபா.(125)

பாலருன் மத்த ரோடு பகர்தரு பிசாச ரென்ன
நாலுணர் பெரியோர் சொல்வர் நுண்ணறி வுடனே யீசன்
காலிணை வணங்கி யன்னோன் கதிருரு வாகி நின்றோன்
ஏலுறு தோபாவே யென் றிசைத் திடத்தக்க வண்ணம். ()

இழிவுறு கரமு நாயு மிளைஞரு முறையிற்சூழ
வழிவுறு மில்லத் துள்ளு மணிமணி வீதியூடுங்
கழிவுறு முடலஞ் சாருங் காட்டினு மாகி யாது
மொழிவுறு மியலு மின்றி மூகைபொற் சிலபோ தூற்றும்.

பிச்சரிற் கேட்பா ரின்றிப் பெருமொழி பலவிசைத்தும்
இச்சையிற் சரித்துநாத னிவனென யாருங் கூறப்
பொச்சையோர் புறத்ததாகப் பொலிதரு சைதைதன்னில்
அச்சனில்லவனேடொன் றியமர்ந்தவனுருவமானன். (128)

மந்திர கழலுன் றன்னை மன்னினோன் விடத்தை நீக்கல்
எந்தவா றந்த வாறே யீசனெடொன் று யோகி
சிந்தையும னதும்வாக்குஞ் செய்களு மிறையையன்றி
வந்திடா முறையிற் சித்தி வயங்கிட விருந்தான் மேலோன்.

இரவினிற் பல்லோரண்ண லெழிலுடற் பகுதி தன்னைக்
கரவறக் கண்டு போற்றுங் கருத்தினற் றிரிவார்க்கெல்லாம்
பரவருளுடைய மூர்த்தி பற்பல துண்டமாக
வரவுருப்புரிவனத்தை வாங்குவன்விடியுமுன்னர். (130)

இன்னணம் பற்ப னூறு யிரமுள விவன்க ணின்று
முன்னவன் செய்த லீலை முற்றவார் மொழிய வல்லார்
பன்னிராண் டிந்த வாறு படர்ந்தது வேலூர் தன்னி
லன்னமுன் னறியா னுகி யமர்ந்தன னறிஞர் கோமான்.

ஆண்டாறு பதனிற் சாதா ரணமென வறையு மத்திற்
பூண்டமீன் மதியில்வெண்மைபொருந்துபக்கத்துமுன்னாண்
மூண்டரே வதியி லையன்முன்னவ னுருவி லார்ந்து
மீண்டுருகிலையனானமேதையோர்பணிந்துபோற்றி (132)

இறையுறை கோயி லாக விலங்கிய புற்க லத்தை
யறைமுறை விதியிற் கோயி லாக்கினர் பணிவா ரானர்
மறைவிலுற் றவனும்வேண்டு மான்மிய மின்றும் மாக்கி
யிறையுரு வாகிநின்று னென்பதிச் சரிதை யாமால். (133)

ஊருளார்க் கெல்லா மிந்த வுறுவன்மே லுற்ற வன்பு
நீருளார் பரமர் மீது நின்றில தென்ன வைய்யன்
பாருளா ருள்ளம் வேட்ட படியெலா மின்றுமீயுஞ்
சீருளா னாகி நின்றான் சிவனுரு வதனி லொன்றி. (134)

## வேறு.

சீரிய சாலி பதினெழு நூற்றிற் செல்லெழுபத்திரண்டதனி
லாரியனீச னணியுருவாகி யமர்ந்தனனவன்புகழ்பல்லோர்
பாரினி லுரைத்துப் பயன்பெறு கின்றார் பாவியேன் றனக்
[குமிச் சிவத்தி
னேரியல் சரித மறைவழி யளித்த விறைவியைப் பணித
[லென் கடனால். (135)

## வேறு.

எந்தைகாழி வந்தநாத னிணைச்சரண்கள் வாழியே
யந்தநாத னருளையுற்ற வண்ணல்தோபா வாழியே
அந்திவண்ண னேடவன்ற னடியார் வாழிவாழியே
ஐந்துவன்ன மோடுநீற மர்ந்தகண்டி வாழியே. (136)

ஸ்ரீதோபாசுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அம்பிகை யடிமலர்

நம்புமீமன் முடிமலர்

பாலரு வாயன்பத மலர் வாழ்க.

சுபமஸ்து:

2/1914..

## விளம்பரம்

---

இதனால் சகல சிவநேயச் செல்வர்களுக்கும் தெரிவிப்பதியாதெனில் இந்தப் புத்தகம் வேண்டியவர்கள் வேலூர் சைதாபேட்டை ஸ்ரீ தோபாசுவாமிகள் மடாலயத்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளிடத்தும், ஷெயூர் இ[illegible]ன வியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ, ஆ. வி. பத்மநாபாச்சாரியாரவர்களிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்:

கணியம்பாடி அத்தியாபக லிங்காச்சாரி.